# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,

மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 29–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 13–ஆம் நாள்**

**AOP.No.16/2021–ல்**

**நிறைவேற்று மனு எண்.147/2022**

**CNR.No.TNSA010025342022**

**M/s. தனலட்சுமி சீனிவாசன் சிட்பண்ட்ஸ்
(பி) லிமிடெட் rep.by. Foreman எழிழரசன்,
எண்.1049/M, S.K. காம்பளக்ஸ், நேரு நகர்,
சேலம் மெயின் ரோடு, ஆத்தூர். ... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்.**

**–எதிர்–**

**1.P.தனசேகரன்
2.G.முருகன்
3.K.பெரியசாமி
4.C.பாஸ்கர்
5.C.சிதம்பரம்
6.S.சீனிவாசன்
7.S.ஸ்டான்லி மனோகர்
8.D.சங்கீதா ... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புக் கடனாளிகள்.**

**9.கடன் இயக்கநர்,
தமிழ்நாடு அரசு போக்குவதத்து கழகம்,
சேலம்**

**10.தலைமை ஆசிரியர்,
கருமாபுரம், சேலம்**

**11.தலைமை ஆசிரியர்,
மரப்பாலம், சேலம்**

**12.தலைமை ஆசிரியர்,
குண்டுக்கல்லூா, சேலம்**

**13.தலைமை ஆசிரியர்,
பருத்திகாடு, சேலம் ... எதிர்மனுதாரர்கள்.**

இந்த மனு இன்று (29.07.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திருமதி.பிரதீபா** அவர்களும் 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.K.பகத்சிங்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

AOP.No.16/2021-ல் 05.01.2022-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட அளிப்பீட்டின்படியான 24,78,656/- உரூபாயும் செலவுத் தொகை 1,05,475/- உரூபாயையும் 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களின் ஊதியத்தை பற்றுகை செய்வதன்மூலம் வசூலிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புத் சட்டத்தின் **21**-ஆம் வகுமுறையின் **11**-ஆம் விதியுடன் உடனிணைந்த **48–**ஆம் விதியின்கீழ் மனுதாரர்/அளிப்பீடு பெற்றவரால் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. AOP.No.16/2021-ல் 01 முதல் 08 வரையிலான எதிர்மனுதாரர் -களுக்கு எதிராக 05.01.2022-ஆம் தேதியன்று அளிப்பீடு வழங்கப்பட்டது. அளிப்பீட்டுத் தொகை 19,89,422/- உரூபாய் ஆகும். ஆண்டுக்கு 24% வட்டி வழங்கப்பட்டிருக்கிறது. வட்டி தொகை 4,89,234/-உரூபாய் ஆகும். மொத்தம் 24,78,656/- உரூபாய் ஆகும். அளிப்பீட்டில் வழங்கப்பட்ட செலவுத் தொகை 1,02,355/- உரூபாய் ஆகும். நிறைவேற்று மனுவின்

செலவுத் தொகை 3,120/- உரூபாய் ஆகும். செவுத் தொகை மொத்தம் 1,05,475/- உரூபாய் ஆகும்.

02. அளிப்பீட்டுத் தொகையையும் செலவுத் தொகையையும் 01 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் இந் நாள்வரை கொடுத்து தீர்க்கவில்லை. 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் அரசுப் பணிபுரிந்து மாத ஊதியம் பெறுகின்றனர். ஆகையால், 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களின் ஊதியத்திலிருந்து பற்றுகை செய்து அளிப்பீட்டு தொகையை வசூலிக்க ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களின் எதிருரையின் சுருக்கம்**

03. மனுதாரரிடம் பணம் வாங்கிய 01-ஆம் எதிர்மனுதாரரை விட்டுவிட்டு பிணையதாரர்களாக கையொப்பமிட்ட 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மட்டும் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை.

04. சீட்டு நடத்துவது சம்மந்தமாக உண்மையான விவரத்தை மனுதாரர் 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு தெரிவிக்கவில்லை. AOP. No.16/2021 நடவடிக்கையில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த எதிர்மனுதாரர்களை மோசடிசெய்து ஒருதலை பட்சமாக அளிப்பீடு பெற்றுக்கொண்டு மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல்செய்துள்ளார். AOP.No.16/2021 நடவடிக்கை சட்ட முறைப்படி நடக்கவில்லை. அளிப்பீட்டின்மீது மேல்முறையீடு செய்வதற்கு

உரியகாலத்திற்குள் இந்த எதிர்மனுதாரர்களுக்கு அளிப்பீட்டின் நகல் வழங்கப்படவில்லை. ஆகையால், இந்த நிறைவேற்று மனு நிலைநிற்காது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. தீர்ப்புக் கடனாளிகள் மட்டுமே நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களாக காட்டப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட எதிர்மனுதாரர் -களின் ஊதியம் வழங்கும் அதிகாரியை எதிர்மனுதாரர்களாக சேர்க்க முடியாது.

07. 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் 01-ஆம் எதிர்மனுதாரருக்கு பிணையதாரர்களாக இருந்தனர் என்ற சங்கதியை 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். AOP.No.16/2021-ல் பிறப்பிக்கப்பட்ட அளிப்பீடு தீர்க்கப்படவில்லை என்பதையும் 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஒப்புக் -கொண்டுள்ளனர்.

08. AOP.No.16/2021 நடவடிக்கையில் உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா? அளிப்பீடு செல்லுமா? என்பது போன்ற வினாக்களை எல்லாம் நிறைவேற்று நீதிமன்றம் ஆராய முடியாது. தீர்ப்பாணைக்கு புறத்தே

நிறைவேற்று நீதிமன்றங்கள் செல்ல முடியாது என்று நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு நெறியை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

09. முதன்மை கடனாளரும் பிணையதாரர்களும் தனிதனியாகவும் கூட்டாகவும் ஒரு கடனுக்கு பொறுப்பு ஏற்றிருக்கும்போது கடன்கொடுத்தவர் இருவர்மீதோ அல்லது இருவரில் ஒருவர்மீதோ நடவடிக்கை எடுக்க முடியும். அதாவது மொத்த கடனையும் அடைக்க முதன்மை கடன்தாரரும் பிணையதாரரும் கூட்டாகவும் தனி தனியாகவும் பொறுப்பாவார்கள். ஆகையால், 01-ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிறைவேற்ற கோராமல் 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மட்டும் அளிப்பீடு நிறைவேற்ற கோரியுள்ளதில் சட்டமீறல் எதுவும் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

10. 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் அரசு பணி புரியவில்லை என்றோ ஊதியம் ஈட்டவில்லை என்றோ மறுக்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஊதிய சான்றுகள் தங்களுடையது இல்லை என்று 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை.

11. மனுதாரர் தாக்கல்செய்துள்ள 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஊதிய சான்றிலிருந்து 02-ஆம் எதிர்மனுதாரர் முருகனின் அடிப்படை ஊதியம் 28,600/- உரூபாய் என்றும் 03-ஆம் எதிர்மனுதாரர் பெரியசாமியின் அடிப்படை ஊதியம் 58,200/- உரூபாய் என்றும் 04-ஆம் எதிர்மனுதாரர் பாஸ்கரின் அடிப்படை ஊதியம் 50,200/- உரூபாய் என்றும் 05-ஆம் எதிர்மனுதாரர் சிதம்பரத்தின் அடிப்படை ஊதியம் 73,700/- உரூபாய் என்றும் 06-ஆம் எதிர்மனுதாரர் சீனிவாசனின் அடிப்படை

ஊதியம் 54,900/- உரூபாய் என்றும் 07-ஆம் எதிர்மனுதாரர் ஸ்டான்லி மனோகரின் அடிப்படை ஊதியம் 50,200/- உரூபாய் என்றும் தெரிய வருகிறது. இந்த சங்கதியை அவர்கள் மறுக்கவில்லை.

12. உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 60(1)(i)-ஆம் பிரிவின்படி உரிய அரசால் விலக்களிக்கப்பட்ட படி தொகைகளை தவிர்த்து எஞ்சியுள்ள ஊதியத்தில் முதல் 1000/- உரூபாயை கழித்து விட்டு எஞ்சியிருக்கும் பணத்தில் 1/3 பங்கு தொகையை பற்றுகை செய்யமுடியும். தமிழ்நாடு மாநிலத்தை பொறுத்தவரை அனைத்து படிகளும் பற்றுகையில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. ஆகையால், 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களின் அடிப்படை ஊதியத்தில் மட்டுமே மேற்சொன்ன பிரிவில் கண்டுள்ளபடி பற்றுகை செய்யமுடியும்.

13. 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள் தங்களது ஊதியம் இதற்குமுன் வேறெந்த தீர்ப்பாணை அல்லது அளிப்பீட்டின் படி பற்றுகை செய்யப்பட்டு இருப்பதாகவோ அல்லது அவ்வாறான பற்றுகை நிறைவடைந்து 24 மாதங்கள் ஆகவில்லை என்றோ கூறவில்லை. ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பதே உகந்தது.

**இறுதிமுடிவு**

14. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. **02-ஆம்** எதிர்மனுதாரர் முருகனின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு **9,200/-** உரூபாயும் **03-ஆம்** எதிர்மனுதாரர் பெரியசாமியின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு **19,066/-** உரூபாயும் **04-ஆம்** எதிர்மனுதாரர் பாஸ்கரின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு **16,400/-** உரூபாயும் **05-ஆம்**

எதிர்மனுதாரர் சிதம்பரத்தின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 24,233/- உரூபாயும் 06-ஆம் எதிர்மனுதாரர் சீனிவாசனின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 17,966/- உரூபாயும் 07-ஆம் எதிர்மனுதாரர் ஸ்டான்லி மனோகரின் ஊதியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 16,400/- உரூபாயும் AOP.No.16/2021-ல் பிறப்பிக்கப்பட்ட அளிப்பீடு முழுமையாக தீர்க்கப்படும்வரை அல்லது 24 மாதங்கள்வரை இதில் எது முன் நிகழ்கிறதோ அதுவரை பற்றுகைசெய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. இந்த பற்றுகை ஆணையின் ஒரு நகலை 02 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்களின் ஊதியம் வழங்கும் அலுவலகத்திற்கு அடுத்த வழக்கு எடுப்பு நாளுக்குள் வழங்க இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது. அடுத்த வழக்கு எடுப்பு நாள் 01.09.2025.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 29–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

**உண்மை/வரைவு ஆணையுரை**
**நி.வே.ம.எண்.147/2022**
**நாள் 29.07.2025**